செ.வெ.எண் -19 நாள்: 31.05.2019

# பத்திரிக்கைச் செய்தி

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்ககத்தால் அறிவிக்கப்பட்ட 385 Dispensers பணிக்காலியிடங்களுக்கு மாநில அளவில் உத்தேச பதிவுமூப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான கல்வித்தகுதி D.Pharm (Indian Medicine) / Integrated Pharmacy Course தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு 01.07.2019 அன்றைய தேதியில் ஆதிதிராவிடர் / அருந்ததியினர் / பழங்குடியினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் தவிர) / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் பொதுப்பிரிவினர் 18 முதல் 57 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

**முன்னுரிமை உடையவர்கள் பிரிவில்** - ஆதரவற்ற விதவைகள், கலப்புத்திருமணம் பதிவு செய்தவர்கள், முன்னாள் / இன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர்களை சார்ந்த பதிவுதாரர்கள், மொழி போர் தியாகிகள் / சுதந்திர போரட்ட தியாகிகளின் வாரிசுகள், நில ஆர்ஜிதம் பதிவு செய்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி போன்ற முன்னுரிமை பதிவினை மேற்கொண்ட பதிவுதாரர்கள் 16.05.2019 வரையிலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

**முன்னுரிமையற்ற பிரிவில்** - ஆதிதிராவிட அருந்ததியினர் பெண்கள் முன்னுரிமையற்றவர்கள் 22.02.2016 வரை பதிவு செய்தவர்களும், பொது பெண்கள் முன்னுரிமையற்ற பிரிவில் 20.03.2017 வரை பதிவு செய்தவர்களும், ஆதிதிராவிட அருந்ததியினர் பொது முன்னுரிமையற்றவர்கள் 16.05.2019 வரை பதிவு செய்தவர்களும், ஆதிதிராவிட பொது முன்னுரிமையற்றவர்கள் 14.06.2017 வரை பதிவு செய்தவர்களும், பிற்படுத்தப்பட்டவர்கள் (முஸ்லீம்) பொது முன்னுரிமையற்ற பிரிவில் 22.02.2017 வரை பதிவு செய்தவர்களும், பழங்குடியின வகுப்பினர் பொது முன்னுரிமையற்ற பிரிவில் 25.01.2018 வரை பதிவு செய்தவர்களும், பொது முன்னுரிமையற்ற பிரிவில் 21.09.2017 வரையிலும் மேற்படி கல்வித்தகுதியினை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவுதாரர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கல்வித்தகுதி, உத்தேசபதிவுமூப்பிற்குட்பட்ட பதிவுதாரர்கள் தங்கள் வேலைவாய்ப்பு அடையாள அட்டை, சாதிச்சான்று, குடும்ப அடையாள அட்டை மற்றும் அனைத்து கல்விச் சான்றுகளுடன் **07.06.2019 அன்று காலை 10.30 மணிக்கு** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வந்து தங்களது வேலைவாய்ப்பு பதிவினை சரிபார்த்துக் கொள்ளுமாறு **மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திருமதி.கா.பொற்கொடி** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**